சிட்டாடல் ஞான சௌந்தரி

நிர்மாணர்கள்:

வசன கர்த்தா:	நாஞ்சில்நாடு T. N. ராஜப்பா
சங்கீத அமைப்பு:	S. V. வெங்கட்ருமய்யர்
நாட்டிய அமைப்பு:	.. K. K. சின்னா
ஆர்ட் டைரக்டர்:	.. F. நாகூர்
உடை அலங்காரம்:	.. M. நடேசன்
மேக்கப்:	. ஹரிபாபு, ராம்தாஸ், துரைசாமி
படப்பிடிப்பு:	. ஜித்தன்பானர்ஜி & செல்வராஜ்
ஒலிப்பதிவு:	. டின்ஷா K. தெஹ்ரானி & விமலன்
எடிட்டிங்:	. B. V. நடராஜ முதலியார்
உதவி டைரக்டர்:	.. P. T. மூர்த்தி

புரொடக்ஷன் & டைரக்ஷன்:

F. நாகூர் & ஜோஸப் தளியத் Jr.

ஸ்டுடியோ: நியூடோன்

★

நடிகர்கள்:

T. R. மகாலிங்கம்	.... பிலேந்திரன்
M. V. ராஜம்மா	.... ஞானசௌந்தரி
D. பாலசுப்ரமண்யம்	.... தர்மர் -
P. S. சிவபாக்யம்	.... லேனாள் -
C. V. நாயகம் -	... சிமியோன்
B. சாரதாம்பாள்	.... பாக்கியம் -
பேபி ராஜாமணி	... பாலஞானம்
P. G. வெங்கடேசன்	.... மைக்கேல் -
P. R. மங்களம் -	.... ஆரோக்கியம்
புளிமூட்டை ராமசாமி	.... அந்தோணி
பபூன் ஷண்முகம்	.... தூசை -
லலிதா பத்மினி -	.... அரண்மனை நாட்டியம்

கதைச் சுருக்கம்

ஞானசௌந்தரி, மன்னர் தர்மரின் ஏகபுத்திரி. தேவமாதாவிடம் நீங்காத பக்தியுடையவள். சின்ன வயதிலே தன் தாயை இழந்ததால் தந்தை அவள்மேல் உயிராயிருந்தார். மகளின் நலத்தை எண்ணி மன்னரும், லேனாள் என்ற பெண்ணை இரண்டாந்தாரமாய் மணம் செய்து கொண்டார். மாற்றாந்தாய் லேனாளும் மகளிடம் அன்புகாட்டி மன்னரை திருப்திப்படுத்தி வந்தாள்.

அரண்மனைத்தாதி ஆரோக்கியம் ராணி லேனாளின் வலதுகை. மகா வஞ்சகி. மன்னரின் அன்பை பூரணமாய்ப் பெற, மகள் ஞானமே இடையூறாய் இருப்பதாய் ராணியிடம் தூபமிடுகிறாள். தூபத்தில் மயங்கிய லேனாள், ஞானத்தின்மீது வஞ்சம் கொள்கிறாள். வஞ்சம் தீர்க்க வாய்ப்பும் வந்தது.

கொடிய மிருகங்கள் பயிரை அழிப்பதாய் குடிமக்கள் வந்து முறையிட்டார்கள். மகளைப் பிரிய மனமில்லாத தர்மர், ஞானத்தை லேனாளிடம் ஒப்புவித்து வேட்டைக்குச் செல்கிறார். லேனாளோ ஞானத்தை படாதபாடு படுத்துகிறாள். ஞானமோ எவ்வளவோ பொறுமையுடன் கஷ்டங்களை யெல்லாம் சகித்து வந்தும் கடைசியில் கொன்றுவிடும்படி கொலையாளிகளிடம் ஒப்புவிக்கப்படுகிறாள். அவர்கள் கைகளைமட்டும் வெட்டிவிட்டு காட்டில் ஓடி மறைகிறார்கள். எதிர்பாராமல் அங்கு வேட்டைக்கு வந்த இளவரசன் பிலேந்திரனால் கையற்ற ஞானம் காப்பாற்றப்படுகிறாள். காதலிக்கப்படுகிறாள். பிலேந்திரனின் பெற்றோர்களாகிய சிமியோனும் பாக்கியமும் எவ்வளவோ மறுத்தும் கடைசியில் ஞானத்தையே கல்யாணமும் செய்துகொள்கிறான்.

வேட்டை முடிந்து வந்து, மகளைக் காணாமல் தத்தளிக்கும் தர்மர் எதிரி படைகளால் தாக்கப் படுகிறார். நண்பர் சிமியோ

னுக்கு உதவி கோரி கடிதம் எழுதுகிறார். தந்தைக்கு வயதாகி விட்டதால், மனைவி கர்ப்பவதியாயிருந்தும் இளவரசன் பிலேந்திரனே உதவிக்கு வருகிறான்.

மாதங்கள் பல கடந்தன. இரட்டைக் குழந்தைகள் பெற்றாள் ஞானம். சேதி கொண்டு வந்தான் தூதன். பதில் கடிதம் கொடுத்தான் பிலேந்திரன். தூதனை உபசரிக்கும்படி லேனாளிடம் அனுப்பினார் தர்மர். ஞானம் உயிருடனிருப்பதாய் அறிகிறாள் லேனாள் மீண்டும் சூழ்ச்சி நடக்கிறது. தூதனை மயக்கி கடிதம் மாற்றியமைக்கப்படுகிறது.

சிமியோன் கடிதத்தைப் படித்தார். துடித்தார், மருமகளிடம் கொடுத்தார். மக்களுடன் தன்னை மாய்த்துவிடும்படி, மணாளனே எழுதி யிருந்ததால், கட்டளையை நிறைவேற்றும்படி, மாமாவை ஞானம் வற்புறுத்தினாள். மறுத்தார். வாதாடினாள். கெஞ்சினாள். பலனில்லை. முடிவில் வேறுவழியின்றி கானகம் அடைந்தாள். கதறி நொந்தாள். கன்னிமரியாளின் காக்ஷியும் கரங்களும் கிடைத்தன.

வெற்றி கண்டு திரும்பிய பிலேந்திரன் பெற்றோரின் செய்கைக்கு வருந்தி, ஞானத்தைத் தேடி காட்டிற்கு வருகிறான். கை பெற்ற காதலியை கண்மணிகளுடன் கண்டான். ஞானம் கோபித்தாள். அவன் சோகித்தான். இருவரும் கூடினர். அரண்மனை நாடினர்.

தர்மரின் வேண்டுகோளின்படி இரு குடும்பங்களும் சந்தித்தன. தர்மரும் ஞானமும் ஆனந்தத்தால் கட்டுண்டனர். சூழ்ச்சி வெளியாயிற்று. லேனாள் மன்னிக்கப்பட்டாள். ஆரோக்கியம் நாடு கடத்தப்பட்டாள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!



1 பாலசுந்தரக் கவி

மலர் பூங்காவிலே வந்து
ஒன்ருய்க் கூடி
மன மகிழ்வோம் அழ
காய்மலர்பறிப்போம்
ஆஹஹா, ஆஹஹா,
ஆஹஹா, ஆஹஹா
மனம் பரவசமே தரும்
வன ரோஜா
பாராய் தாமரை கனக
மணி
ஆஹஹா, ஆஹஹா,
லலலலலலலலலலலா லலா

ஆஹா கனகாம்பரமிது மலரே
அதிசயம் கவருதே
மனோரஞ்சிதம் மதுரித குயிலும்
மயிலும் நடமிடுதே - இனிதாய்
கலந்தாடுவோம் வருவீர் விரைவாய்
பாடி அனைவரும் ஜோடியாக

விகடன்: சரி சரி புதுமையிதா - தனிவிடுவது முறையா
டண்டண்டண்டண்டண்டண்டண்டண்டாண்

2 கம்பதாசன்

...க வாழுவேன் - எந்நாளுமே
...பேசுவேன் என் நாதன்பால்
...ள் உள்ளம்போல் நடந்திடும் தானே
...ரில்லை, எனைநிகரே, எவரிலையே புகழுடனே (உ)
...வபோகமும் தானடைந்தேனே
...பெருமை இனிதடைந்த மகிமைமிகும் மகாராணி
நான் (உ)

அருள் தாரும் தேவமாதாவே—ஆதியே இன்பஜோதியே
இருள் நீங்கவே இகமீதிலே—ஈடிலா நிதியே (ஆதி)

தொகையரு

திருவே துணை நீயே—தேவத்தாயே
சிறியாள் வினை தீராய் (ஆதி)
வானின் தேவதையே—அருள்வாய் மரியே
தேனின் மேலாம்பதமிதே—ஜீவா தாரமே

4 கம்பதாசன்

விதியிதுவோ பேதை கதி
இதுவோ என்செய்வேன்

கன்னியே மாமரித்தாயே-
என் - காணிக்கை
கண்ணீரே

இன்னல் கடல்தனிலே -
இறகில்லா பக்ஷிபோல்
வீழ்ந்தேன்

மின்னல் நிகரான வாழ்
வில்-மீளாத சோகம்
கொண்டேனே

பெண்களில் நான் பெரும்பாவி
ஏன் பிறந்தேன் புவிமீதே
அன்னையில்லாத சேய்நான்
அன்பாக ஏழைபால் அருள்வாய்

5 பாபநாசம் சிவன்

அருளே தயானந்தமே—உலகில்
உயிர்யாவும் உணர்வோடு மனமகிழ் மங்கள (அரு)
தங்க தகடுபோல் வானில்—
...டும்
...ாங்கதிர் வீசும்
(அரு)

...ம் கமழ்
...னமே
அழகோடு
மலர்ந்திடும் தேனார்

பலவிதமாம் நாதமே—
பறவைகள்
கலகல சங்கீதமே
கதிரோனை கண்டுள்ளம்
பொங்கிய
மன்னர்கள் கழனிகளை
நாடுவார்
மங்கையர் நீராடும்
தாமரைப் பொய்கையும்
வசீகர செளந்தர்ய
மாமலர் சோலை (அரு)

6 K. R. சாரங்கபாணி பிள்ளை

வெட்டுண்ட கைகள் வேதனை கொண்டேனே
விதிவசத்தால் இந்த கதியை அடைந்தேனே
கொட்டுண்ட ரத்தமே—கொஞ்சமோ மாதாவே
கும்பிடும் கரங்களை கொண்டுசென்றாரே
இனிவரும் வாழ்வினில் இனிதுடன் வாழவே
இணைபிரியாமலே துணைபுரிவாயே
கனவிலும் நனவிலும் உனை
மறவாத
மனந்தருவாயே மாமரித்
தாயே

A

பெண்-மனமோகனனே—மாரா—வாராய்
இனிதே இதழ் அமுதேபெற எனதாருயிரே
ஆண் -வானமோஹினி—கலை - ஞான ராகினி
நிறைநிலாவிலே—நின் றூஞ்சலாடுவோம்
பே.ஆ. மனமே மகிழ்வோமே—எந்நாளும் நாமே

B

ஆ. மாமழையில் மின்னலைப்போலே
ஆடிடும் மானினியாளே
பே. ஆர்த்திடும் கடலலைபோலே
ஆடுவேன் காதல் ஜ்வாலையாலே
ஆ. கண்ணே உன் ஆடலைக்கண்டே
விண்ணும் ஆயிரம் கண்கொண்டதே
பே. காணும் தாரகை நின்நகையே
ஆ. காதல் மல்லிகைதானே

C

ஆ. பாடுவோம் ஆடுவோம்—அனுராக கீதமே
பாயும் தென்றல்தனிலே
பே. பண்பாடிடும் மாங்குயில் போலே
...ன்னுடன் நாமே
...பூங்கொடிபோலே
...—பாடுவோம்
...பாகமே - மகா -
...ஜீவபாக்யவசமே
...ம் ஆடல் காதல் நலமே
...அன்பினில் இன்பம்
கொண்டோமே—நாமே

D

கோரஸ்: இணைபிரியா காதலரே-
ஈடில்லா இன்பமே பெறுவீர்
உயர் ஆனந்தக் கனவினை
தருவீர்
மலர் வசந்த பவனியென
வருவீர்

ஆ. லாலல்லலலா—லாலல்லலா
பெ. லலிதமனோ லயமிதுவே
ஆ. ஆனந்தமே—ஆனந்தமே
பெ. லலிதமனோலயமிதுவே
கோரஸ்: விழிபருகிடும் பரவசமிதுவே
உயிர் வாழ்க்கையின் ரகசியம் அதுவே
ஆனந்தமே-ஆனந்தமே - லலிதமனோலயமிதுவே
லாலல்லலலா — லாலல்லலலா
லாலல்லலலா — லாலல்லலலா

8 கம்பதாசன்

வனிதாமணியே—மௌனமேனோ மானினியே
இனிய மோகினியே—என துயிரே—மானினியே
இன்பகலைமதியே—எழிலார் கலாவதியே
ஏகமல்லால் பிரிவேது இனியே
இகபோக சுகிர்தானந்த ஏகாந்தவெளியிலே
இன்சுடர் வீசிடும் பொன்னில வொளியிலே
சற்குண மனோகரியே—சாந்தமிகு வாரிதியே
ஏகமல்லால் பிரிவேது இனியே

9 **கம்பதாசன்**

ஆண் : காதலில் தானும் இன்பம்—மேலாம்
பூதலமேல் ஆதரவாம்
பெண்: பேதையும்நானே—பேசவல்லேனே
பேரின்பமான தன்மை—நம்
ஆ: உயிரின் கீதம்போல் உலவும் தென்றல்
பே: ஊசலாடுதே எழில் ரோஜா
ஆ: உலகமீதில் உந்தன்முகமே ரோஜா
பே: உண்மைதானே மதனே
ஓடையில் நடனம் ஆடுதுவிண்மீன்
ஆ: உள்ளங்கவரும் உன்விழிபோலே
பே: தேடரும் ஜீவிய தெள்ளமுதே
ஆ: சேர்ந்தினி வாழ்ந்திடுவோம்—நாம்

10 **கம்பதாசன்**

ஜெகமேல் நானினி பாக்கியவானே
சேயிருவரை நான் அடைந்தேனே
தீவிரப்போரை நான் புரிந்திடுவேன்
தீமைகள் நேரா மாஜெயம் பெறுவேன்
தேவரின் சீரருளாலே—ஜெக
ஜீவரின் மேலாம்பாலரைக் காண்பேன்
தேவமொழிகேட்பேன் பாவனமாவேன்
ஆவலாய் ஞானம் அன்பினில் ஆழ்வேன்
ஆ[illegible] சுபதினம்தானே—ஜெக

கம்பதாசன்

...லர்—எங்கள்
...லமலர்—கையில்
...னபிடித்த உடனே
...ரியம் கண்ணுக்
குள்ளேவரும்



ஆமா ஆமா மனசு-சும்மா ஜிலுஜிலுஜிலுஜிலுஎனுது
இந்த மலருக்குள்ளே ஒருபொண்ணுஆடுது
வஞ்சிக்கொடியே வாராய் வண்ணமலரைத் தாராய்
மிஞ்சுமெந்தன் ஆசைதனை தீராய்—பெண்ணே
குலுக்கி நடை நடக்கும் சின்னக்குட்டியே
கொடுத்திடுவாய் அந்த மலர்தனையே
கொடுத்திடும் மலரதை வெகு சுகமாய்
நுகர்ந்திட சொர்க்கமே பெறலாம் (வா)

12

கம்பதாசன்

குலமாமணி செல்வரே தாலேலோ
இளஞ்சூரிய சந்த்ரரே தாலேலோ
இருவிழிபோலே—திருவருளாலே
இன்பம் தரவே—பிறந்தீரே
புவிமேல் புகழ்சேர் அரசாண்டிடவே
புதுமா மலர்காள் நிதமேவாழ்வீர்
அன்பே ஆசைக் கடலே—மெய்(என்)
ஆருயிரே தவ பாக்கியமே (குல)

நெஞ்சமே நீ அஞ்சாதே—நம்
ஆண்டவரே துயரால் வருந்தினரே (நெ)
வீண்பழி சுமத்தி தீயோர் பிடித்தார்
தூணோடிணைத்தே கசையால் அடித்தார் (நெ)
ஆறாத்துயர் தரவே—ஆணியினால்
முடிசெய்தே சிரசில் சூட்டினரே—பெரும்
சிலுவையதை தோள் மேலேற்றி கால்
இடறிட ஓட்டி வாட்டினரே (நெ)
அநியாயமி தாமே தேவனை
அறைந்தாரே சிலுவை மீதினிலே
யார் சோதனை சூழ்ந்திட நோவாரோ
பேர் அருளால் அவரே மேம்படுவார் (நெ)

14

மாதா நின் தேவ தரிசனமே
என் பாப விமோசனமே—திருமாதாவே
ஜென்ம பயனடைந்தேனே - என்-செல்வத் திருமணிகாள்
அன்னை தந்த இருகரங்கள்-அன்னையாகியுமை அணைத்திடுமே
சின்னஞ்சிறு கிளிகாள்-உம்மை-சேயராகவே நாடைந்தே
தங்கச் சிலைகளே இனியே—தரையினில் உமைவிடுவேனோ
நெஞ்சமே குளிரவே—கொஞ்சியே மகிழ்வேன்

15

வாழ்வினில் என்உயிர் வடிவான ஞானமே
வாடுதென் நெஞ்சம் அந்தோ
ஊழ்வினை வஞ்சந்தானோ உற்றஎன் பாபமோ
உண்மையின் சோதனையோ
தாழ்விலா அன்பிலே தடைவர லாகுமோ
தணலிடை நான் மெழுகானேன்
ஏழ்கடல் உலகில்எனது இன்பத் திருவே
எங்குசென்று உங்களை காண்பேன்
பரமபிதா துணைசெய்வாய்—தேவா
தரணியிலே நீகதியே
வரமருள்வாய் சுகபோதா
—மலர்பாதா
ஆத்மகீதா—ஏசுநாதா

16 ம்ப

ஜீவிய பாக்கியமே
சாந்தம் திகழும்
—
தவம்செய் மேலோர் போலவே
மலைபார் பாலனே

ஜெபம் செய்வோர் மணிமொழிபோல்
தேனெனப்.பேசிடும் பைங்கிளிபார்
மாலும் மயிலும் உன் துணையே
மரங்கள் உந்தன் போர்வீரர்
கானகம் உங்கள் அரசாக்ஷி
கடவுள் தந்த கண்மணிகாள்—நம் (ஜீ)

17 K. D. சந்தானம்

மண்ணிலே கடலில்போய் மறைந்தாயோ
மச்சமாய் நீந்துகின்றாயோ
விண்ணிலே தாரகையாகவே மா
வேடிக்கை காட்டுகின்றாயோ
என்னத்ரோகம் நான்புரிந்தேன் இ
ஏங்கவும் செய்தாயே—ஞா
உன்னையே எந்தன் உயிருடலா
என்னைநீ மறந்தாயே
என் ஞானம் — என்
என் ஞானம் —

று

கு, வச

கள்

VADRI